**தலைப்பு – 156 இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 215 | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் |
| - | இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் |
| - | இளைஞர் நலன்புரி நிதியம் |
| - | தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபை |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 8,848,532,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 6,054,575,560 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு முறையே ரூபா 2,443,515,290 மற்றும் ரூபா 350,441,151 அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 34 சதவீதம் மற்றும் 22 சதவீதம் ஆகக் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 156 | 7,222,532,000 | 4,779,016,711 | 2,443,515,289 | 34 |
| 215 | 1,626,000,000 | 1,275,558,849 | 350,441,151 | 22 |
| மொத்தம் | **8,848,532,000** | **6,054,575,560** | **2,793,956,441** | 32 |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 15601 | 21,000,000 | 8,944,892 | 14,400,000 | 16,441,654 | 93,000,000 | 58,035,097 |
| 21501 | 60,000,000 | 39,941,136 | 46,000,000 | 62,201,281 | 300,000,000 | 144,922,344 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 102,167 கூட்டுமொத்தமாக இருந்தது.

### (ஆ) பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 49,053,645 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களம் | கட்டுநிதி கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0066/000 | 24,553,434 |
| | 6000/0000/00/0015/0042/000 | 6,843,000 |
| தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 6000/0000/00/0015/0096/000 | 17,657,211 |
| மொத்தம் | | 49,053,645 |

## 2 ஆம் பகுதி

---

## ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

---

## 1. தலைப்பு 156 – இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

---

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 28 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுகளும் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) பதிவேடுகள் மற்றம் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. அமைச்சினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் உரிய படிவங்களின் படி சேதம் மற்றும் நட்டப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

ii. தேசிய இளைஞர் படையணிக்குச் சொந்தமான 47 வாகனங்களுக்குரிய வாகன சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டு தேவையான தகவல்கள் உரிய பிரகாரம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,775,272,500 தொகையான மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

ii. 15 செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடான ரூபா 80,528,890 தொகையிலிருந்து ரூபா 52,280,008 தொகை எஞ்சியிருந்ததுடன் அவ்வாறு சேமிக்கப்பட்டவை அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டின் 50 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

iii. 2 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8,500,000 தொகை மற்றும் ரூபா 225,000,000 தொகையை குறை நிரப்பு மதிப்பீட்டு

நிதியேற்பாடுகளில் முறையே 57.5 சதவீதம் மற்றும் 10.08 சதவீதம் உரிய நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

iv. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் கடப்பாடாக இருந்த காரணத்தால் 19 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,928,675 கூட்டுத்தொகையினால் நிதியேற்பாடு செலவின எல்லையை விஞ்சியிருந்தது.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்

---

முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்படி அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,960,647 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,428,522 தொகையான மீதி வருடமொன்றிற்கு குறைவான காலப்பகுதிக்குரியதாகும். 1 வருடத்திற்கும் 2 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 80,465 ஆகும். ரூபா 451,660 தொகையான கடன் மீதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரியதாகும்.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் 4 மாவட்ட அலுவலகங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பித்தல் கணக்காய்வுத் திகதியாகிய 2014 திசெம்பர் 03 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. தலைமை அலுவலகத்திலும் 10 மாவட்ட அலுவலகங்களிலும் நீண்டகாலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 204 பொருள் அலகுகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 770 இன் படி நடவடிக்கை எடுத்தல் கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 03 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறே மாத்தறை அலுவலகத்தில் பொருள் மெய்மையாய்வின் போது 04 மிகையான பொருட்களும் 03 பொருட்களின் பற்றாக்குறையும் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நி.பி 109 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன விபரம் கீழே தரப்படுகின்றன.

| சொத்து வகை | சொத்து அலகுகளின் எண்ணிக்கை | சொத்து வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 01 | தபால் சேவைகள் அமைச்சு |
| | 07 | கல்விச் சேவைகள் அமைச்சு |
| | 02 | தொழிற்பயிற்சி அதிகாரசபை |
| | 05 | தேசிய இளைஞர் படையணி |
| | 01 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் |
| | 01 | சிரேஷ்ட அமைச்சரவை அலுவலகம் |
| | 02 | தேசிய கடற்தொழில் மற்றும் மீன்பிடி பொறியியல் நிறுவகம் |

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான கீழே விபரங்கள் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சினால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கள் சொந்தமாக இருந்த நிறுவனம் | அளவு | காலப்பகுதி |
|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | சனாதிபதி அலுவலகம் | 1 | 3 |
| | பாதுகாப்பு அமைச்சு | 1 | 4 |
| | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் | 1 | 6 |
| | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 2 | 1 |
| | தபால் சேவைகள் அமைச்சு | 1 | 3 |

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

i. எம்பிலிப்பிட்டி தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம் அமைக்கப்பட்ட நிலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியாக இருந்ததுடன் நிலையத்திற்கு வழங்கப்பட்ட கட்டிடம் மற்றும் 26 வீடுகளிற்காக உரிய மதிப்பீட்டுப் பெறுமதி செலுத்தி கொள்வனவு செய்யுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சிற்கு கோரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தேசிய இளைஞர் படையணியால் ஏனைய தரப்பினர்களிற்குச் சொந்தமான காணிகளில் 37 நிலையங்கள் நடாத்திச் செய்யப்பட்டு அவற்றைப் பராமரிப்பதற்காக ரூபா 8,696,537 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்குரிய பொறுப்புக்கள் ரூபா 38,541,896 ஆகும்.

## 1.5 இணக்கமின்மைகள்

---------------------------

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (i) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| | 2002 இன் 21 ஆம் இலக்க இளைஞர் படையணி அதிகாரச் சட்டத்தின் | - | |
| | 2(4) ஆம் பிரிவு | | அமைச்சின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக தேவையான தொழிற் பயிற்சி, இளைஞர் அபிவிருத்தி மற்றும் தாபித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டு இளைஞர் படையணியால் தமது அதிகாரம் அந்தத் குழுக்களிற்கு கையளிக்க வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | 11 ஆம் அத்தியாயத்தின் 12.12 ஆம் பிரிவு | 1,437,611 | கலண்டர் மாதமொன்றிற்கு முன்னர் அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகிச் சென்ற 60 உத்தியோகத்தர்களிடமிருந்து மாதமொன்றின் சம்பளமாக ரூபா 1,437,611 தொகை இளைஞர் படையணிக்கு அறவிட வேண்டியிருந்தது. |

(iii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| ------------------------------ | | |
| 1646 | - | இளைஞர் படையணியின் வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) 2007 இன் மதியுரையாளர்களை சேர்ப்பதற்கான கொள்வனவு வழிகாட்டிக்கோவை

| | | |
|---|---|---|
| -------------------------------------- | | |
| 2.3 (ஆ) வழிகாட்டி | 12,852,000 | தேசிய இளைஞர் படையணியின் தலைமை அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக மதியுரையாளர்களைத் தெரிவு செய்வதற்குரிய வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. |
| 2.3.1 (சீ) வழிகாட்டி | - | மதியுரைச் சேவையைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடு தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய அறிக்கை (EOI) தயாரித்து கொள்வனவுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 3.2 வழிகாட்டி | - | மதியுரையாளர்களை தெரிவு செய்வதற்காக போட்டி முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை |
| 3.4 வழிகாட்டி | - | மதியுரை சேவைகளுக்காக செலவாகின்ற கிரயம் தொடர்பான விரிவான தகவல்களை உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3.5 வழிகாட்டி | - | ரூபா 2 மில்லியனை விட மேற்பட்ட நிர்மாணங்கள் தொடர்பான பகிரங்க செய்திப் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் மதியுரையாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. |

(v) 2006 இன் தேசியக் கொள்வனவு வழிகாட்டிக் கோவை

| | | |
|---|---|---|
| 2.5 வழிகாட்டி | 470,984 | தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தித் திட்டம் அமைந்துள்ள பிரதேசத்தை நவீன மயப்படுத்தும் செயற்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகள் தொடர்பாக முறையான மதிப்பீடின்றி கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. |
| 5.4.4 வழிகாட்டி | | பிணை முறி பெறப்பட்டிருக்கவில்லை |
| 2.3.2 வழிகாட்டி | | துறை தொடர்பாக நிபுணத்துவம் உடைய உத்தியோகத்தரை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை |
| 8.9.3 வழிகாட்டி | | முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டம் தாமதம் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழெ காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

மீளாய்வாண்டின் போது சிறு முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவினால் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 8 மாவட்ட அலுவலகங்களுக்கு ரூபா 446,000 தொகையான நிதியேற்பாடு அனுப்பப்பட்டிருந்த போதும் திட்டமிட்டபடி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

இளைஞர் படையணியால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| திவுலுப்பிட்டி இளைஞர் படையணி தலைமை அலுவலகத்தின் திருத்த நடவடிக்கைகள் | 6,715,759 | 2011.12.01 | 5,264,220 | தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் குறைபாடு காணப்பட்ட காரணத்தால் உரிய பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்ததாக ஒப்பந்தக்காரரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

(இ) செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| இளைஞர் பூங்காவின் நிர்மாணம் | | | | | |
| மாத்தறை | 169,000,000 | 2011 | 2011 | 124,781,750 | காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| பத்தரமுல்லை | மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2010 | 2011 ஆகஸ்ட் | சமர்ப்பிக்கப்படவில்லை | தெரிவு செய்யப்பட்ட காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்படாமை |

## 1.7 செயலாற்றல்

--------------------

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு/கூட்டிணைந்த திட்டம்/ செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி அமைச்சின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.7.1 தேசிய இளைஞர் படையணி

------------------------------------------------

2013 ஆம் ஆண்டின் பயிற்சி பாடநெறிகளுக்காக முதலாவது தொகுதியாக சேர்க்கப்பட்ட 6405 மாணவர்களில் 43.5 சதவீதமானோர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்ததுடன் இரண்டாவது தொகுதியாக சேர்க்கப்பட்ட 3153 மாணவர்களில் 21.8 சதவீதமானோர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். 2013 ஆம் ஆண்டில் பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களில் தொழில் பயிற்சிக்குப் அனுப்பி வேலை வாய்ப்பை பெறக்கூடிய அளவு முதலாவது தொகுதியில் 12 சதவீதமும் இரண்டாவது தொகுதியில் 5.4 சதவீதமும் ஆன குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### 1.7.2 சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

------------------------------------------------------------------------

இளம் சந்ததியினரின் தொழில் முயற்சியைப் அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையர்களின் தொழில் முயற்சியாண்மைக் கலாசாரத்தை வடிவமைக்கும் அடிப்படை நோக்கத்தின் பேரில் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டு நிலைமையில் அதாவது தொழில் முயற்சியாளர்களை இனங்காணும் போதும் பாடநெறிகளை ஒழுங்கமைக்கும் போதும் இளம் சந்ததியினரின் இலக்கை அடையும் வழிகள் காணப்படாதிருந்தமையும் தொடர்ச்சியான பின் தொடர் நடவடிக்கைகள் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தாதிருந்தமையும் கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

I. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களில் உத்தியோகபூர்வமாக மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தலைமை அலுவலகம் மூலம் அந்த பிரதேசங்களில் நிறுவன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் அலுவலகங்களை தாபிப்பதற்கோ அல்லது நிறுவன நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

II. பாணந்துறை மாவட்ட செயலகத்தில் 2013 சனவரி 22 இல் நடாத்தப்பட்ட அறிவூட்டும் செயலமர்விற்காக 25 பேர்கள் சமுகமளித்திருந்ததுடன் அதில் மூன்று பேர்கள் மாத்திரம் 30 வயதுக்கு குறைந்தவர்களாகும். அதில் இருபத்திரெண்டு பேர் அச்சந்தர்ப்பம் வரையிலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக இருந்தனர்.

III. பாணந்துறை பிரதேச செயலகத்தில் 2013 ஏப்ரல் 22, 23 மற்றும் 24 என்ற தினங்களில் நடாத்தப்பட்ட ''வியாபாரத்திற்கு வழி'' தொழில் முயற்சியாண்மை பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய இருபத்தெட்டு தொழில் முயற்சியாளர்களில் ஐந்து பேர் 36 இற்கும் 45 வருடங்களுக்கும் இடைப்பட்ட வயதுடையர்களாக இருந்தனர். இந்த ஐவரில் நான்கு பேர் சிறு தொழில் முயற்சிப் பிரிவிற்கு 2012 ஆம் ஆண்டின் போது தொடர்பாக இருந்ததுடன் தொழில் முயற்சிகளை 2006, 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

IV. களுத்துறை மாவட்ட அலுவலகத்தின் மூலம் அமுலாக்கப்பட்ட ''வியாபாரத்திற்கு வழி'' நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்குபற்றியவர்களில் 45 – 60 வயது வரையான தொகுதிக்குரியதாக இருந்ததுடன் 71 பேர் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய போதிலும் தற்போது வெற்றியகரமாக தொழில் முயற்சிகளை நடாத்திச் செல்வது 11 பேர் மாத்திரமேயாகும்.

## 1.8 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடு

-----------------------------------------------------------------

### சீராக்கப்பட வேண்டிய மீதி

-----------------------------------------

இளைஞர் படையணியால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின்படி கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 87,450 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 42,500 பெறுமதியான காசோலைகள் 06 மாதங்களுக்கும் 01 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்திற்குரியதாக இருந்ததுடன் ரூபா 44,950 பெறுமதியான காசோலைகள் 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியதாக இருந்தன.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு இணையாக பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 6,620,000 தொகை செலவில் 500 விளையாட்டுப் பொருள் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பொதுவான கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக அவசர கொள்வனவாக கருதி இந்தக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே கொள்வனவு செய்யப்பட வேண்டிய விளையாட்டுப் பொருட்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய மாதிரியொன்றும் கிரய மதிப்பீடொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விளையாட்டுப் பொருட்கள் உரிய அளவில் முறையான பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தலொன்று காணப்படவில்லை.

(ஆ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வளவில் ரூபா 5,500,000 செலவில் பெரிய திரையொன்றை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மிகவும் அத்தியவசியமானது என அவசர கொள்வனவாகக் கருதி கொள்வனவு நடைமுறைகளுக்கு புறம்பாக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு முன் அதன் தேவை மற்றும் பிற்பட்ட பயன்பாட்டுத் தேவை தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் கண்காட்சியின் பின்னர் திரை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் தேசிய இளைஞர் படையணி கண்காட்சி கூடத்திற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் அலங்காரங்களை மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 3,114,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய விரிவான கிரய அறிக்கை ஒன்று தயாரிக்கப்படாமையாலும் முறையான உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்த முடியாமையாலும், ஆற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக முறையான சான்றுகள் இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டமை காரணமாகவும் இந்த செயற்பாடு பொருளாதார ரீதியாகவும் ஆக்க பூர்வமாகவும் மேற்கொண்டமைக்கான உறுதிப்படுத்தல் ஒன்றை பெறமுடியாதிருந்தது.

(ஈ) நிபுணத்துவக் கட்டடத்தின் திறந்த வெளிப்பகுதிக்கு காபட் இட்டு அமைப்பதற்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 5.6 இன்

பிரகாரம் விரிவான மாதிரியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய செயற்பாடுகள் உரியவாறு மேற்கொண்டமைக்கான சான்றிதழ் இன்றி அதற்குரிய மொத்தப் பெறுமதியான ரூபா 1,560,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

தேசிய இளைஞர் படையணி தலைமை அலுவலகத்தின் புதிய கட்டிட நிர்மாணித்தல் செயற்பாடுகளுக்கு கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்படாமல் தெரிவு செய்யப்பட்ட மதியுரையாளர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையில் இல்லாமல் ஒப்பந்தக் கிரயத்தில் 6 சதவீத கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 775,000 பெறுமதியான செயலாற்றல் பிணைப்பொறுப்பினை இதற்காக பயன்படுத்துவதற்கு நிறுவனத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## 1.11 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இளைஞர் படையணியால் ரூபா 22,885,000 கிரயத்தில் சீருடைகளுக்காக 23,000 நீளக் காற்சட்டைகள் வழங்கும் ஒப்பந்தம் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 சனவரி 15 ஆந் திகதிய கேள்வி வழங்கல் கடிதத்தின் படி அந்த பூர்த்திசெய்யப்பட்ட ஆடைகள் 2013 மே 10 ஆந் திகதி முடிவுறுத்தும் வகையில் 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட வேண்டி இருந்தது. எனினும், குறித்த திகதியில் உரிய பொருட்கள் வழங்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் 8.14 இன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் பெற்றுக்கொள்ளப்படாமல் துணிகளை இறக்குமதி செய்யும் போது ஏற்பட்ட தாமதத்தினால் காலத்தை நீடிக்குமாறு வழங்குனரால் கேட்கப்பட்ட கோரிக்கையின்படி நிறுவனத் தலைவரினால் சகல ஆடைகளையும் வழங்க வேண்டிய காலம் 2013 யூன் 25 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தாமதக் கட்டணமாக அரசாங்கத்திற்கும் அறவிடக்கூடியதாக இருந்த பாரிய தொகையொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) இளைஞர் படையணிக்கு 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,591,651 தொகை செலவில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2,500 பூட்ஸ் பாதணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் களஞ்சியப் பதிவேட்டின் படி நிறுவனத்திற்கு 2114 பூட்ஸ் பாதணிகள் மாத்திரம்

கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் ரூபா 708,950 பெறுமதியான 386 பூட்ஸ் பாதணிகள் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 தேசிய திறன் மற்றும் புதிய வடிவமைப்பு போட்டிற்கான விளம்பர நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்காக ரூபா 41,664 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் கணிசமான குறைபாடுகளுடன் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமையால் மீளத் திருத்தி பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதற்கு ரூபா 20,400 தொகையான பயனற்ற செலவினம் ஒன்றை செய்ய வேண்டியிருந்தது.

## 1.12 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.12.1 இளைஞர் தொழில் வாய்ப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தாமை

---------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 நவம்பர் 22 ஆந் திகதிய 1681/03 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் இளைஞர் வேலைவாய்ப்பு வலையமைப்பு அமைச்சின் கீழ் புறம்பான நிறுவனமொன்றாக தாபிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிறுவனத்தை செயற்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 3,550,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாடு உரிய நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும், அதற்குரிய 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 06/2283/274/015 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் "இளைஞர் வேலை வாய்ப்பு தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம்" அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2006 திசெம்பர் 20 ஆந் திகதி அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

I. இளைஞர் வேலைவாய்ப்பு வழங்கலுக்காக தேசிய வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு சனாதிபதியின் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்றை நியமித்தல்.

II. அமைச்சு செயலாளரினதும் ஏனைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்கு பற்றலுடன் செயற்குழு ஒன்றை நியமித்தல்.

III. இளைஞர் வேலைவாய்ப்பு வழங்கலுக்கான தேசிய வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக இளைஞர் வேலைவாய்ப்பு தேசிய செயலகமொன்றை அமைச்சின் கீழ் தாபித்தல்.

(இ) 2007 ஆகஸ்ட் மாதத்தின் போது இளைஞர் விவகார அமைச்சினால் சர்வதேச தொழிளாளர் அமைப்பு மற்றும் உலக வங்கியின் பங்களிப்புடன் இலங்கையில் இளைஞர் வேலைவாய்ப்பு தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் இலங்கையின் வேலை வாய்ப்பின்மையை இழிவுபடுத்துவதற்கான பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இளைஞர் வேலை வாய்ப்பு வழங்கலில் அமுல்பபடுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள், அதற்காக எடுக்க வேண்டிய செயல் வழிகள், வழிகாட்டி மற்றும் பரிந்துரைகள் கணிசமான அளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கூறப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த விடயங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

1.12.2 எம்பிலிப்பிட்டி தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தில் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இளைஞர் சேவை கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிரதான 05 நிபந்தனைகள் சேவை வழங்குகின்ற நிறுவனத்தினால் மீறப்பட்டமையால் அந்த சேவைகள் உரிய பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த போதும் அது தொடர்பாக முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

1.12.3 தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி இளைஞர் படையணியில் 04 பயிற்சி நிலையங்களுக்கு 2013 செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் வழங்கப்பட்ட ரீ சேட், காற்சட்டை மற்றும் பாதணிகளை உள்ளடக்கிய 1181 சீருடை பொதிகள் குறித்த நிலையத்திற்கு கையேற்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் வகையில் பொது 219 படிவத்தின் பிரகாரம் தகவல்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2014 நவம்பர் 25 ஆம் திகதி வரையிலும் இளைஞர் படையணி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

i. இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 52 | 34 | 18 |
| மூன்றாம் நிலை | 181 | 134 | 47 |
| இரண்டாம் நிலை | 906 | 663 | 243 |
| ஆரம்ப நிலை | 77 | 68 | 9 |
| ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 6 | 1 | 5 |
| மொத்தம் | 1222 | 900 | 322 |

ii. தேசிய இளைஞர் படையணி

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 9 | 7 | 2 |
| மூன்றாம் நிலை | 55 | 53 | 2 |
| இரண்டாம் நிலை | 255 | 215 | 40 |
| ஒப்பந்த அடிப்படை | 357 | 304 | 53 |
| மொத்தம் | 676 | 579 | 97 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மீளாய்வாண்டின் இறுதி வரையில் 97 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
- மீளாய்வாண்டின் போது இரண்டாம் நிலையில் 88 உத்தியோகத்தர்கள் இளைஞர் படையணியின் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன் இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 13 சதவீதமாகும்.

(iii) சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் அமைச்சின் விடயப் பரப்பெல்லையின் கீழ் காணப்படுகின்ற ஒதுக்கப்பட்ட பிரிவாக இருந்ததுடன் அதன் சகல பதவியணியினர் தரங்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று காணப்படவில்லை. மூன்றாம் நிலையில் தரமிடப்பட்ட வேலைக்காக அமைச்சின் பதவியணியினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஏனைய பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு இருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பி.பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 18 | 05 | 13 |
| உதவிப் பணிப்பாளர் (சேவை மூப்பு) | 05 | 01 | 04 |
| தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்கள் | 50 | 30 | 20 |
| மொத்தம் | 73 | 36 | 37 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் படி அந்தப் பிரிவின் பதவியணியினர் வெற்றிடங்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

iv. எம்பிலிபிட்டி தலைமைத்துவ பயிற்சி அபிவிருத்தி தேசிய நிலையம்

| **ஊழியர் வகை** | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை | 5 | 4 | 1 |
| இரண்டாம் நிலை | 27 | 24 | 3 |
| ஆரம்ப நிலை | 36 | 32 | 4 |
| மொத்தம் | 68 | 60 | 08 |

## 2. தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 2.4 முதல் 2.12 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பராமரிக்காமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| கணனி உப பாகங்கள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| 2013 யூலை 12 ஆந் திகதி 5ஏ/ஏஎஸ்/ஏஏ/சுற்றுநிருபம் ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களச் சுற்றறிக்கை | ரூபா 201,544,661 பெறுமதியான சொத்துக்கள் குறியீட்டு இலக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டு மதிப்பீடு செய்யப்படாமையால் 35 செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயங்களிலிருந்தும் ரூபா 97,043,200 தொகையான நிதி ஏற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கும் நி.பி 66 மாற்றல்களின் மூலம் மாற்றப்பட்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 254,529 தொகையான 19 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

21501 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின்படி, அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,060,883 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்காக அமைச்சில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 5 தீர்மானங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டதன் படி சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | கட்டிடங்கள் | 04 | 4 வருடங்களுக்கு மேல் |
| (ii) | வாகனங்கள் | 03 | 1 வருடத்திற்கு மேல் 4 வருடங்களுக்கு குறைவு |
| (iii) | இயந்திரங்கள் | 05 | 4 வருடங்களுக்கு மேல் |
| (iv) | ஏனைய சொத்துக்கள் | 64 | 4 வருடங்களுக்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள்மெய்மையாய்வை நடாத்துதல்**

---

38 தொழில்நுட்பக் கல்வித் திணைக்களம் மற்றும் தொழில்நுட்ப/ கைத்தொழில் கல்லூரிகளுக்குரிய 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

திணைக்களத்தால் சில சொத்துக்கள் முறையற்றவகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சொத்து வகை** | சொத்துக்களின் எண்ணிக்கை/அலகுகளின் எண்ணிக்கை/அளவு | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (i) | காணி (ஹெக்டேயர்) | 12 ஏக்கர் 3 றூட் 17 பேர்ச் | பல்கலைக்கழக விஞ்ஞான நிறுவனம் | 22,000,000 |
| | | 110 பேர்ச் | விளையாட்டு அமைச்சு | தரப்படவில்லை |
| | | 07 ஏக்கர் | ஊவா வெல்லஸ்ஸ விளையாட்டு மைதானம் | |
| | | 12 ஏக்கர் | இளைஞர் படையணி பயிற்சி நிலையம் | |
| | | 1.5 ஏக்கர் | திறந்த பல்கலைக்கழகம் | |
| | | 9.5 பேர்ச் | திருமதி. ஜீ.ஜீ. பிரேமாவதி | |
| (ii) | கட்டிடம் | 04 | விளையாட்டு அமைச்சு | |
| | | 02 | இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனம் | |

(ஈ) பத்து தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் கல்லூரிகளில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட 2637 நூலகப் புத்தகங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (i) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| 1942 இன் 18 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய கட்டளைச் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட 2003 இன் 17 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | அமைய மற்றும் நாட்கூலி ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 8 சதவீத பங்களிப்புப் பணம் அறவிடப்பட்டு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2007 தொடக்கம் 2011 வரை திணைக்களத்தின் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 527,000 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அதில் ரூபா 296,521 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) தாபன விதிக்கோவை | |
| II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | வேலைகளைக் கவனிக்கும் நியமனம் தற்காலிகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வேலைகளைக் கவனிக்கும் நியமனம் 2 வருடங்களுக்கு மேற்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. |
| XII ஆம் அத்தியாயத்தின் 10.1.5 ஆம் பிரிவு | முன்னைய விடுமுறைகளை வழங்குவதற்கான அங்கீகாரம் அமைச்சின் செயலாளருக்காக இருந்த போதிலும் அவ்வாறான முறையான அங்கீகாரமின்றி வரக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விசார் பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவருக்கு 17½ |

நாள் விடுமுறை அதிபரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| XII ஆம் அத்தியாயத்தின் 23:18 ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே செலவிடுகின்ற விடுமுறை தொடர்பான அறிக்கை திணைக்களத்தின் தலைவர் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்
---------------------------------------------------

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 177 | சேகரிக்கப்படுகின்ற அரசாங்கப் பணம் நாளாந்தம் வங்கியில் வைப்பிலிடப்படவேண்டிய போதிலும் தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் உத்தியோகத்தரால் 2010 முதல் 2012 வரையான காலப்பகுதியில் அறவிடப்பட்ட ரூபா 38,221 தொகை காசேட்டில் குறிப்பிடப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 1646 | நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) கொள்வனவு வழிகாட்டிக் கோவை | அநுராதபுரம் தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரால் கொள்வனவு வழிகாட்டிக்கு முரணாக 3 நீர்வடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

(v) தொழில்நுட்பக் கல்லூரியின் செயற்பாட்டுக் கைநூல்
---------------------------------------------------

| | |
|---|---|
| 7.13(I) ஆம் பந்தி | சகல பாடநெறிகளும் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 422 மொத்த தேசிய தொழில்கற்கைப் பாடநெறிகளில் 284 பாடநெறிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. |

## 2.7 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதில் நலிவுகள்

2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ரூபா 99.11 மில்லியன் பெறுமதியான 07 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2.8 செயலாற்றல்

9 தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 29 கைத்தொழில் கல்லூரிகளின் பரீட்சைகளுக்காகத் தோற்றிய மாணவர்களை தெரிவாக எடுத்து பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்தபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 38 தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் கல்லூரிகளில் நடாத்தப்பட்ட 458 பாடநெறிகளின் பரீட்சை பெறுபேறுகளை கருத்தில்கொள்ளும் போது 279 பாடநெறிகளின் பரீட்சைகளுக்காக தோற்றிய மாணவர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதத்தால் சித்தியடைந்திருந்தனர். ஏனைய 179 பாடநெறிகளில் சித்தியடைதல் 0 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரக் கைநூலின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 12 தேசிய தொழிற் தகைமைப் பாடநெறிகளும் (NVQ) 37 தேசிய தொழிற்தகைமையற்ற (NVQ) பாடநெறிகளும் நடாத்தப்பட்டிருந்தன. அதில் 06 தேசிய தொழிற் தகைமைப் பாடநெறிகளிலும் (NVQ) 15 தேசிய தொழிற்தகைமையற்ற (NVQ) பாடநெறிகளிலும் சித்தியடைதல் 50 சதவீதத்தைவிட குறைவான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஒப்பந்த நிருவாகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்கக் கொள்வனவு செயல்நடைமுறையின் இலக்கம் 4.3 இன் படி மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது மிகவும் சரியானதும் அண்மித்ததாகவும் மதிப்பீடு தயாரிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்படாமையினால் ஒப்பந்தம் தொடர்பாக ஆர்வத்தைக் காட்டுகின்ற ஏனைய

ஒப்பந்தக்காரர்களுக்கு அசாதாரணமொன்று ஏற்பட்டிருந்தமையும் இறுதியாக நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய விலை நலன்கள் இல்லாது போனமையும் ரூபா 5,280,062 தொகை செலவில் திணைக்களத்தின் மின்பாரந்தூக்கியை பொருத்தியது தொடர்பான பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாத்தளை தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு மாடி கைத்தொழிற்சாலை கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது அந்தக் காணியின் எல்லைக்கு சமாந்தரமாக நிர்மாணிப்பதற்கு சகல திட்டங்களும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஒப்பந்தத்தைத் கையளிக்கும் போது கட்டிடத்தை நிர்மாணிக்கின்ற இடம் மாற்றப்பட்டதன் அடிப்படையில் ரூபா 11,287,068 தொகையான மேலதிக கிரயமொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

## 2.10 நட்டங்களும் இழப்புகளும்

---

கட்டிடத்திட்டம் அல்லது நிதி ஏற்பாடு அல்லது ஒப்பந்தம் கையளித்தலின்றி அநுராதபுரம் தொழில்நுட்பக் கல்லூரி வளவில் புதிய இரண்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நிலத்தை தயார் செய்தல் மற்றும் ஞாபகார்த்த பலகைக்காக ரூபா 364,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.11 முகாமைத்துவ நலிவுகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்காக ஆதனவரி செலுத்தும் போது இலக்கம் 355 மற்றும் இலக்கம் 355 ஏ ஆக இரண்டு ஆதனவரி இலக்கங்களின் கீழ் கொழும்பு மாநகர சபைக்கு ஆதனவரியாக வருடாந்த முறையே ரூபா 2,577,778 தொகை மற்றும் ரூபா 2,071,111 ஆக செலுத்தப்பட்டிருந்த போதும் அவற்றின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்பக் கல்லூரி அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2 தனியார் நிறுவனங்கள் தொடர்புபடுத்தப்பட்டு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கும் 6 தொழிநுட்பக் கல்லூரிகளுக்கும் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை(EMIS) ரூபா 33,118,046 மில்லியன் (வரி

தவிர்த்து) செலவில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எதிர்பார்த்த இலக்கு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆறு வாகன விபத்துக்கள் தொடர்பாக அறவிடவேண்டிய ரூபா 3,727,556 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1313 | 555 | 758 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 144 | 21 | 123 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1272 | 778 | 494 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 1172 | 805 | 367 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 3901 | 2161 | 1742 | 02 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 1742 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமன நிபந்தனைகளின் படி வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பூர்த்தி செய்திராத உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்புக்கள் பிற்போடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒரு உத்தியோகத்தரால் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்காகச் சமர்ப்பித்திருந்த சான்றிதழ்களின் உண்மைத்தன்மை மற்றும் அந்தச் சான்றிதழ்கள் எத்துறைகளுக்குரியது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமன அதிகாரியின் அங்கீகாரமின்றி இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு II இற்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்குப் பதிலாக இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்தின் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் சித்தியின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்குரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் பூர்த்தி செய்ததாகக் கருதப்பட்டிருந்தது.

(v) இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறமைகாண் தடையை விடுவிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு கட்டளையிடாதிருந்த போதிலும் அக்கடிதம் பிழையாக மாற்றப்பட்டு அப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) 1987 ஆம் ஆண்டின் போது கட்டிட மதியுரையாளராக நியமனம் வழங்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்குரிய தகைமைகள் உரியவாறு உறுதிப்படுத்தாமல் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சிற்கும் சனாதிபதி செயலகத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு சம்பளமாக ரூபா 407,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(viii) பதவியொன்றுக்கு முழு நேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை அவசியமாயின் நிரந்தர நியமனம் தாமதமின்றி வழங்கப்பட வேண்டிய போதிலும் 45 நிரந்தர பதவிகளை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும்

ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் அதிபருக்கு 2015 சனவரி 26 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 3.1.1 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 3.1.2 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக

கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 3.1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 3.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

### 3.1.4 நிறுவகத்தை கூட்டுத்தாபனமாக்கல்

2005 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு இலக்கம் 05/0994/029/013 இன் படி இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் முறையாக கூட்டுத்தாபனமாக்கும் வரையிலும் மத்திய போக்குவரத்துச் சபையின் தேவைகளின் அடிப்படையில் நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானம் வழங்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் நிறுவகத்தை கூட்டுத்தாபனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 நிதிக்கூற்றுக்கள்

### 3.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 3.2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 3.2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

நிறுவனத்தின் 02 ஊழியர் தொகுதிகளுக்காக 02 முறைமைகளின் கீழ் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் பணிக்கொடை படி கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு மிகையாக ரூபா 532,074,670 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி அப்பெறுமதி ரூபா 514,586,175 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 17,488,495 தொகை மீள் கணிப்பீட்டு மிகை அதிகரித்து காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய போக்குவரத்துச் சபையில் நியமனம் கிடைத்து, நிறுவகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியிருக்காக மீளாய்வாண்டிற்குரித்தாக ஒதுக்கப்பட வேண்டிய சேமலாப நிதியத்தின் பெறுமதி ரூபா 22,018,855 ஆக இருந்ததுடன் பேரேட்டின் படி மீதி ரூபா 23,435,838 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இந்த இரு மீதிகளுக்குமிடையே ரூபா 1,416,983 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து உழைக்கப்பட்ட வட்டி வருமானமொன்றாக இனங்காண்பதற்குப் பதிலாக சேமலாப நிதியக் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டமை இந்த வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்குரிய நடைமுறை வேலை தொடர்பாக சான்றுப்படுத்திய பட்டியல் கிடைப்பதற்குமுன், ஆண்டின் இறுதியில் நிதி அறிக்கைகளில் ரூபா 1,894,765 மதிப்பீட்டுப் பெறுமதி நடைமுறை கட்டிட வேலையாகக் குறிப்பிடப்பட்டு அதன் செலவுப் பதிவு கடன்கொடுத்தோராகக் காண்பிக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் சான்றுப்படுத்திய பட்டியல் கிடைத்ததன் பின்னர் பணத்தைச் செலுத்தும் போது மேற்கூறிய பதிவினைக் கருத்திற்கொள்ளாது கட்டிடக் கணக்கில் ரூபா 1,951,324 தொகை வரவு வைக்கப்பட்டு காசு செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் கட்டிடமாக மீள்கணிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் இறுதி விளைவாக ஐந்தொகையில்

கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,894,765 இனால் மிகைக் கணிப்பீடாகியிருந்தது.

(ஈ) வங்கி நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ளவாறு காசேட்டின் படி மீதி ரூபா 19,133,425 ஆக இருந்ததுடன் நிதிநிலைமைக் கூற்றில் அது ரூபா 19,128,762 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி நிதிக்கூற்றுக்களில் வங்கி மீதி ரூபா 4,663 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களின் படி நிறுவகம் பயன்படுத்திக்கொண்டிருக்கின்ற 19 வாகனங்களின் தேறிய பெறுமதி ரூபா 439,961 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அச்சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2005 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,133,529 தொகையான நடைமுறைச் சொத்து மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டதுடன் அதற்குரிய விபரம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாத சம்பள மீதியான ரூபா 308,496 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

நிதிப்பிரமாணம் 371 இன் படி ஏதாவதொரு செயற்பாட்டிற்காக வழங்கப்படும் முற்பணம் அச்செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் பொருட்கொள்வனவுகளுக்காக 21 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 1,252,550 கூட்டுத்தொகையான முற்பணம், பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு 1-3 மாதங்களுக்கிடையிலான தாமதத்தின் பின்னர் முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

## 3.3 நிதி மீளாய்வு

### 3.3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 31,919,207 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,811,037 ஆகும். அதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 22,108,170 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அவ்வீழ்ச்சிக்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 44,693,792 இனால் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3.4 செயற்பாட்டு மீளாய்வு

### 3.4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தால் மீளாய்வாண்டின் போது 09 முழுநேர பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதிவரையில் 03 பாடநெறிகளுக்காக பூர்த்திச் சான்றிதழ் (NVQ) வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய 04 பாடநெறிகளையும் பூர்த்திசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மில்ரைட் வடிவமைப்பு மற்றும் டீசல் தொழில்நுட்ப வடிவமைப்பு போன்ற பாடநெறிகளுக்காக மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் பயிற்சிக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 வருட முழுநேரப் பாடநெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 1395 இற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 154,439,216 கிரயம் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி ஒரு மாணவருக்காக வருடாந்தம் ரூபா 110,709 தொகை மற்றும் பாடநெறி பூர்த்திசெய்யப்படும் போது மாணவரொருவருக்காக ரூபா 442,836 கூட்டுத்தொகையான செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்கும் தனியார் கம்பனியொன்றிற்கும் இடையே 2010 பெப்ரவரி 08 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி ரூபா 1,103,200 கிரயத்தில் கணனி கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று வழங்கி இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதற்காக ரூபா 591,100 கூட்டுத்தொகையான கிரயம் செலவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின்படி கணனி கணக்கீட்டு மென்பொருள் முறைமை ஸ்தாபித்தல் 90 நாட்களில் பூர்த்திசெய்வதற்கு இருந்த போதிலும் மீளாய்வாண்டு முடிவுறும் வரையில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழுக்களின் காரணமாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக செலவிடப்பட்ட தொகைக்கு பிரதிபலன் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திச் செற்பாடுகள் தொடர்பாக கிரயத்தை கணக்கீடு செய்யும் முறைமையின் அடிப்படையில் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த பொருட்களை பதிவேட்டிற்குக் கொண்டுவருவதற்கோ அல்லது பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை.

(ஈ) நிறுவகத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்குரிய காப்புறுதிப் பெறுமதி, காப்புறுதிப் பங்களிப்புப் பணம், விபத்து மற்றும் நட்ட இழப்பு தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு மற்றும் கோவை முறையான பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளுக்குரித்தாக வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத பெறுமதி ரூபா 35,036 தொகையான 06 காசுக் கட்டளைகள் கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயிலுனர் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாணவர் உதவித் தொகையில் வருடாந்தம் ரூபா 250 அறவிடப்பட்டு முறையான அங்கீகாரமின்றியும் பிரதிபலன்களைச் செலுத்துவதற்கான முறைமையொன்று இன்றியும்

நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்ட தனியார் விபத்து மற்றும் காப்புறுதி நலன் திட்டத்திற்குரிய நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,404,205 ஆக இருந்ததுடன் அதற்குரிய ரூபா 3,852,799 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் மாணவர் உதவித் தொகைளில் ரூபா 325,900 கூட்டுத்தொகை மற்றும் முதலீட்டு வட்டியாக ரூபா 388,066 தொகை காப்புறுதி நிதியத்திற்குக் கிடைத்திருந்தது. இந்த திட்டத்திற்காக சட்டரீதியான அடிப்படையொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்கு பங்களிப்பதற்காக விபத்துக்களுக்கு மேலதிகமாக நலன்களை வழங்கும் வகையில் காப்புறுதித் திட்டத்தை முறைமைப்படுத்துவதற்காக நிறுவகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய போக்குவரத்துச் சபையின் சேமலாப நிதியத்தின் பங்களிப்பாகப் பெறப்பட்ட இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் அந்த நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்களுக்காக அறவிடப்பட்ட தவணைப் பணங்களின் கூட்டுத்தொகையான ரூபா 2,716,773 பணம், இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புவதற்கு அல்லது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக உரிய தீர்மானமின்றி செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாப நிதியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி பாநெறிகளை அமுல்படுத்துவதற்கு மேலதிகமாக அரையாண்டு, குறுகிய கால மற்றும் விஷேட பயிற்சிப் பாநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த பயிற்சி பாடநெறிக்குரிய பாடங்களைத் திட்டமிடல் பாடம் தொடர்பான நிபுணத்துவம் கொண்ட சபையினால் மேற்கொள்ளப்பட்டு நாளதுவரையாக அப்பாடத் திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அப்பாடநெறிகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) விரிவுரைப் படிகளுக்கு மேலதிகமாக இப்பாடநெறிகளை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களுக்காக முறையான

அங்கீகாரமின்றி ஆண்டின் போது ஊக்குவிப்புப் படியாக ரூபா 179,000 தொகையும் வருகைப் படியாக ரூபா 1,077,003 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. பாடநெறிக்குரிய பொதுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய கிரய ஒதுக்கீடுகளின் அடிப்படையும் தெளிவாக இல்லாதிருந்ததுடன் அதற்காகவும் முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்வில்லை.

(iii) முறையான அங்கீகாரமன்றி இப்பாடநெறி வருமானத்தில் நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முறையே ரூபா 16,430,258 தொகை மற்றும் ரூபா 7,056,642 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பாநெறி வருமானம் ரூபா 41,673,397 ஆக இருந்ததுடன் செலவினம் ரூபா 33,331,522 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது செலவினம் 60 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த செலவினத்தில் 87 சதவீதம் அரையாண்டு பாடநெறிகளுக்காக உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட படியாக இருந்ததுடன் ஒவ்வொரு பாடநெறி வருமானத்திலும் 26 சதவீதம் முதல் 112 சதவீதம் வரையான வீச்சில் விரிவடைந்திருந்தது. இவ்வாறு படிகளைச் செுலுத்துவதற்காக உரிய அடிப்படையொன்றுக்காக முறையான அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவிலலை.

(ஆ) ஊழியர் பணிக்கொடை கணிப்பீட்டில் முறையற்ற தன்மை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) ஊழியர் பணிக்கொடை கணிப்பீடு செய்யும் போது பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்காக இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவரின் கடிதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

(ii) ஊழியர் பணிக்கொடை கணிப்பீடு செய்வதற்காக மத்திய போக்குவரத்துச் சபையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் இரண்டு அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு கணிப்பீட்டில் முறையற்ற தன்மை

ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தொழில் ஆணையாளரின் 2005 மார்ச் 23 ஆந் திகதிய சேஅஅ/கம்கொ/லங்ஜர்காஆ/05 ஆம் இலக்க கடிதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு மத்திய போக்குவரத்துச் சபையின் கீழ் சேர்க்கப்பட்டு நிறுவகத்திற்கு நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளத்தில் 10 சதவீதமும் நிறுவகத்திலிருந்து 12 சதவீதமுமாக சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளுக்கு இணங்காத வகையில் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(ii) அந்த பங்களிப்புப் பணம் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படாமல் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 22,307,769 ஆக இருந்தது.

### 3.4.5 செயற்பாடற்ற சொத்துக்கள்

நிறுவகத்தின் 25 ஆவது ஆண்டுநிறைவைக் கொண்டாடுவதற்காக 1985 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட லொத்தர் சீட்டு விற்பனையில் பெறப்பட்ட ரூபா 309,792 தொகையான வருமானம் உரிய நோக்கத்தில் ஈடுபடுத்தப்படாமல் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கொள்வனவு

(ஆ) கணக்கீடு

(இ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஈ) ஊழியர் கடன் கட்டுப்பாடு

## 04. இளைஞர் நலன்புரி நிதியம்

### 4.1 அறிமுகம்

1990 மே 15 ஆம் திகதிய 610/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 1990 இன் 01 ஆம் இலக்க அவசர சந்தர்ப்பங்கள் (ஆதன அரசுடமையாக்கும்) கட்டளையின் மூலம் அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட சகல நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத ஆதனங்கள், இளைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தும் நோக்குடன் 1993 மே 24 ஆம் திகதிய 768/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் படி மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் (40 ஆவது அத்தியாயம்) 5 ஆம் பிரிவின் கீழ் 1993 மே 21 ஆம் திகதி சனாதிபதி அவர்களால் விதிக்கப்பட்ட 1993 இன் 01 ஆம் இலக்க இளைஞர் நலன்புரி நிதியக் கட்டளையின் கீழ் இளைஞர் நலன்புரி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதன் படி, 1993 யூன் 29 ஆம் திகதி முதல் அந் நிதியம் இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரின் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் போது அது வரையில் செயற்பட்ட பொது மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் வலுவிழந்ததுடன் அவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 1990 இன் 01 ஆம் இலக்க அவசர சந்தர்ப்பங்கள் (ஆதன அரசுடமையாக்கல்) பிரமாணங்கள் மற்றும் 1993 இன் 01 ஆம் இலக்க இளைஞர் நலன்புரி நிதியப் பிரமாணம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.2 கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) பொது மக்கள் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் 1994 ஆகஸ்ட் மாதத்தின் போது வலுவிழந்ததனால் நிதியத்திற்குரிய கலைத்தல் கணக்குகள் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அசையும் ஆதனங்களின் உரித்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு கையளிப்பதற்கு சட்டரீதியான தடைகள் இல்லையென 1999 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு முடியும் வரையிலும் அந்த ஆதனங்களின் உரித்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முறையான பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதியத்திற்குச் சொந்தமான தங்க ஆபரணங்கள் மற்றும் பண வைப்புக்களை தீர்த்து வைக்காமை தொடர்பாக 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக

மீளாய்வாண்டு முடியும் வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபை

### 5.1 ஸ்தாபிப்பு

1979 இன் 11 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 1979 யூலை 25 ஆம் திகதிய மற்றும் 1980 செப்தெம்பர் 24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் படி, பிரித்தானிய எடின்பரோ கோமஹனால் 1956 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட எடின்பரோ கோமஹன் பரிசளிப்பு தீர்மானத்தைப் பின்பற்றி 1980 ஆம் ஆண்டின் போது இளைஞர் நடவடிக்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு இணையாக இவ் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய இளைஞர் வெற்றி அதிகாரசபையை ஸ்தாபிக்கப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டளை உள்ளடங்கிய ஓர் வரைவில் அதிகாரசபையின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் கட்டளையின் படி அதிகாரசபையின் முக்கிய நோக்கான இளைஞர் பரிசளிப்பு முறை தொடர்பான சட்டங்களும் முறைமைகளும் ஐக்கிய இராசதானியின் டியூக் கோமஹன் மானிய முறையில் சட்டங்களும் முறைமைகளுமாக வேண்டியதாக வரைவுக் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 5.2 கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் அங்கத்தவர்களை நியமித்தல்

வரைவுக் கட்டளை இலக்கம் 06 இன் படி அதிகாரசபையின் அங்கத்தவர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் அதன் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கத் திட்டத்தின் படி 17 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக இளைஞர் சேவைகள் மன்றத்திற்குக் கிடைத்த திறைசேரி நிதியேற்பாடுகளிலிருந்து

ரூபா 5,000,000 தொகை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 4,537,448 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,183,643 தொகை செலவில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 08 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய மீண்டெழும் செலவினங்களாக ரூபா 2,353,805 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 09 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.